# ரா.பி.சேதுப்பிள்ளையின் கற்பனை நயம்

முனைவர் செ.ரவிசங்கர், எம்.ஏ., பிஎச்.டி.,

*உதவிப்பேராசிரியர்*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை – 625 021.*

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் பல படைப்பாளர்கள், அறிஞர்கள் உருவாகி தமிழை வளர்த்துள்ளனர். அந்த வரையில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் தமிழுக்காக ஆற்றியுள்ள தொண்டு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் இலக்கிய அரங்கிலே மாறுதல் செய்தார் சேதுப்பிள்ளை. சென்னையிலே இலக்கிய கூட்டங்களானால் 50 பேர் வந்துகொண்டிருந்தனர். தம்முடைய சொற்பொழிவுகளின் மூலம் 50 ஐ 50,000 ஆக்கித் தந்தவர் அவர். தமிழுக்கு ஒரு நல்லது என்றால் அவர் உடலிலே தெம்பு; முகத்திலே உவகை, தமிழுக்கு ஓர் இடையூறு என்றால், அவர் உடலிலே தளர்ச்சி; முகத்திலே கவலை இப்படியாக அவர் தமிழைத் தம் வாழ்வோடு வாழ்வாக இணைத்து வாழ்கிறார்' என்று மு.வ.அவர்களால் பாராட்டப்பெற்றவர் எனக் கூறலாம். அவரின் படைப்புக்கள் பல்வேறானப் பன்முகப்பார்வை கொண்டவை. ஆராய்ச்சி, கற்பனை, போன்றவற்றில் தனக்கேயுரிய தனித்தன்மையைப் பெற்றவர். அந்த வகையில் இக்கட்டுரை ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் கற்பனைத் திறனை ஆராய்கிறது.

**படைப்புகள்**

ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் பல்வேறு தன்மைகளில் நூல்களைப் படைத்துள்ளார்.

தமிழ் விருந்து, தமிழகம் ஊரும் பேரும், தமிழர் வீரம் ஆற்றங்கரையினிலே, கடற்கரையிலே, வழிவழி வள்ளுவர், கால்டுவெல் ஐயர் சரிதம், வேரின் வெற்றி, வேலும் வில்லும் அலையும் கலையும், செஞ்சொற்கவிக் கோவை, பாரதியார் இன்கவித் திரட்டு, தமிழின்பம், போன்றவை ஆகும்.

இப்படைப்புக்களை எல்லாம் பைந்தமிழ் நடையில் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்புக்கள் இரண்டு உண்டு. ஒன்று முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றும் திறன்; மற்றொன்று ஏற்ற இடங்களில் சிறந்த இலக்கியப் பகுதிகளை அளவறிந்து மேற்கோளாக எடுத்துக் காட்டல், இவ்விரு சிறந்த பண்புகளாலும், பேராசிரியர் அவர்கள் உரைநடையை ஊன்றிப் பயில்வார்' என்று சஞ்சீவி குறிப்பிடுகிறார். அந்த வகையில் சேதுப்பிள்ளை தமிழுக்காகவே வாழ்ந்தவர் எனில் மிகையல்ல.

**கற்பனை நயம் :**

படைப்பாளர்கள் தமது படைப்புக்களில் கற்பனையைப் பயன்படுத்தி படைப்பர். ரா.பி. அவர்கள் கடற்கரையிலே என்னும் தலைப்பில் ஒரு நூலைப் படைத்துள்ளார். அந்த நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் கற்பனைக் கட்டுரைகள் ஆகும். ‘கண்ணுக்கினிய காட்சி தரும் கடற்கரையிலே நின்று கவிஞரும் கலைஞரும் பேசும் பான்மையில் அமைந்த இக்கட்டுரைகளிலே தமிழகத்தின் செழுமையும் செம்மையும், பழமையும் பண்பாடும் சிறந்து விளங்கக் காணலாம்' என்று சேதுப்பிள்ளை அவர்களே நூலின் முகவுரையில் கொடுத்துள்ளார்.

அந்த வகையில் 20 தலைவர்களைப் பற்றி கற்பனையில் அமைந்த பகுதியாக இந்நூல் அமைந்துள்ளது.

**ரா.பி.பார்வையில் தலைவர்கள்**

ரா.பி. சேதுப்பிள்ளை பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றி வளர்ந்த தலைவர்களை தாம் சம காலத்தில் கண்டது போன்று கற்பனையைச் சுழலவிட்டுள்ளார். திருவள்ளுவரைப் பற்றி குறிப்பிடும் போது அவர்

உண்மையிலேயே சென்னைக் கடற்கரைக்கு வந்தது போன்றும் ரா.பி. அவரைப் பார்த்தது போன்றும் கட்டுரை எழுதியுள்ளார்.

“திருமயிலைக் கடற்கரையில் வேனிற்கால மாலைப்பொழுதிலே வந்து நின்றார் ஒரு மேதை. சீலமே உருவாய அப் பெரியார் சிறிது நேரம் கடலைக் கூர்ந்து நோக்கினார். அப்போது அடி வானத்திலே எழுந்தது ஒரு கார்மேகம். இடி இடித்தது; இருள் பரந்தது. பெருமழை பெய்யும்போலிருந்தது. அம்மழைக் குறியைக் கண்டும் கடற்கரையை விட்டுப் பெயர்ந்தார் அல்லர் அப்பெரியார்; கடலின் மேல் மண்டிய மேகத்தை நோக்கிப் பேசலூற்றார்”.

இவ்வாறாக கற்பனை நயத்தை ரா.பி.கூறியுள்ளது வாசகனை திருவள்ளுவர் பக்கம் ஈர்க்கிறது. மேலும் வள்ளுவர் பேசினால் எப்படி இருக்கும் என்பதை நம் கண் முன்னால் கொண்டு வந்து காட்டுகிறார்.

‘என்னே இம் மேகத்தின் கருணை! சென்னை மாநகரில் அனல் வீசுகின்றது; கேணியில் குடிதண்ணீர் குறைகின்றது; உயிர்கள் உலர்ந்து திரிகின்றன; இவற்றையெல்லாம் அறிந்தும் இக்கடல் அளவிறந்த தண்ணீரை தன்னகத்தே தேக்கி வைத்துக்கொண்டு ஆனந்தமாகக் கொட்டமடிக்கின்றதே! இது தகுமா? முறையா? இந் நெடுங்கடல் கொடுங்கடலாக அன்றோ இருக்கின்றது!’ என்று வள்ளுவர் பேசுவதாகக் கற்பனையைப் புனைந்துள்ளார்.

வள்ளுவர் பாடியதற்கேற்ப கடல் தனது வேலையைச் செய்வதாகக் கட்டுரையை புனைந்துள்ள பாங்கு ரா.பி.யின் கற்பனை மனநிலையைக் காட்டுகிறது.

‘கைமாறு வேண்டாக் கருமுகிலே! உனக்கு மனமுவந்து தண்ணீர் அளித்தால், தனக்கும் நலம் உண்டு என்பதை அறியாது போயிற்றே இக்கடல்! நீ மழை பெய்யாவிட்டால் இந்நெடுங் கடலும் தன் நீர்மை குன்றுமே! நீ ஆற்று நீராக வந்து கடலைப் பெருக்குகின்றாய்; ஊற்று நீராகப் பொங்கிக் கடலை ஊட்டுகின்றாய்; மழை நீராகப் பொழிந்து கடலை நிறைக்கின்றாய். ஒரு வழியாகக் கொடுத்துப் பல வழியாக வாங்குகின்ற உபாயமும் இக்கடல் அறியா தொழிந்ததே.

‘நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான் நல்கா தாகிவிடின்’

என்று நான் பாடியதை நீ மெய்ப்பித்து விட்டாயே! என்று வள்ளுவர் கூறுவதாக கட்டுரையை வடித்துள்ள பாங்கு கற்பனையின் ரசனையையும், நயத்தையும் மிக அழகாக ரா.பி.அமைத்துள்ளதைக் காட்டுகிறது.

இலக்கியங்களைப் படைத்தவர்களையும் பக்தியில் ஆழமான சிந்தனையுள்ளவர்களையும் தமது கற்பனையில் பேசவைத்த பெருமை ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களைச் சாரும்.

புனிதவதியாரை மிக நயத்தோடும் உணர்வோடும் உணர்ச்சி பொங்க பேச வைத்துள்ளார் ரா.பி.அவர்கள். புனிதவதியாரின் கதையை அனைவரும் அறிந்ததே! ஆனால் அவரே நேராகக் கடலைப் பார்த்து பேசினால் எப்படி இருக்கும் என்பதுதான் ரா.பி. செய்துள்ள கற்பனைப் புலமை ஆகும்.

‘காரைப் பெருங்கடலே! நான் பெற்ற காலமுதல் நீ காட்சி தருகின்றாய். குழந்தைப் பருவத்தில் உன் தெள்ளிய மணலிலே தவழ்ந்து விளையாடினேன். ஊன் அலைகளோடு உறவாடினேன். இளங்காற்றை நுகர்ந்து இன்புற்றேன் உன் துறைமுகத்தில் கப்பல்களைக் கண்டு களிப்புற்றேன்’[1].



© 2022, IRJTSR 

இது புனிதவதியாரின் பாடல்களில் இடம்பெறவில்லை. ஆனால் இவர் காரைக்கால் பகுதியைச் சார்ந்தவர் என்பதனால் அங்குள்ள கடலில் விளையாடியிருப்பவர் என்று நம்மால் யூகிக்க முடிகிறது. மேலும் புனிதவதியார் உள்ளம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை மிக நுட்பமாக எடுத்துரைக்கிறார்.

கரை காணாக் கருங்கடலே! ஆயினும் இப்பொழுது உன்னைக் கண்டு அஞ்சுகின்றது என் நெஞ்சம். ஆற்றாமையால் அலருமருகின்றது என் உள்ளம் என் கணவர் - மாசற்ற மணாளர் - வாணிகம் செய்து வருவேன் என்று சொல்லி உன் துறைமுகத்தில் வங்கமேறிச் சென்றார்! நெடுநிதி கொணர்வேன் என்று நெடுங்கடலோடினார். ஆண்டு பல சென்றன. அவர் எங்குள்ளார் என அறியாது பாவியேன் ஏங்கித் தவிக்கின்றேன். ஆவர் ஏறிச் சென்ற கப்பல் என்னாயிற்றோ? இதுகாறும் அவர் வராத காரணந்தான் யாதோ? என்று என்னாத எண்ணமெல்லாம் எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகின்றதே!

என்று புலம்புகிறார். புனிதவதியார் நேரடியாக நம்மைப் பார்த்து பேசுவதுபோலவும் இக்கற்பனைத் திறம் அமைந்துள்ளது. ‘அருந்தமிழ்ச் செல்வர் பெரும்புகழ்ச் செல்வர்; அதனாலேயே தான் போலும் அவர் சொல்லின் செல்வர் என்று போற்றப் பெறுகின்றார். சொல் என்ற சொல்லுக்கு எழுத்தே தனித்துவம் தொடர்ந்தும் பொருள் தரும் சொல்லென்றும் எஞ்சாத வாழ்க்கைக்குப் பின்னும் எஞ்சி நிற்கும் எச்சமாகிய புகழ் என்றும் இரு பொருளும் உண்டன்றோ? அந்த வகையில் இரு பொருளுக்கும் உரிய சொல்லின் செல்வராய் விளங்கியவர்’ இரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் என்று ந.சஞ்சீவி கூறுகிறார்.

அதற்கேற்ப இவரின் சொற்களும், வாக்கியங்களும் கற்பனையின் உச்சத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

**சென்னை மாநகர் பற்றி**

பரிதிமாற் கலைஞர் பேசுவது போன்று சென்னை மாநகரைப் பற்றி ரா.பி. அவர்கள் மிக அழகான வருணனையை முன்வைத்துள்ளார். கற்பனையில் ஒருவர் பேசுவது அவ்வளவு எளிதானதல்ல, ஆனால் தான் எடுத்துக் கொண்ட பொருளை மிக அழகாகப் புனைந்துள்ளர். ஆந்த வகையில் சென்னை மாநகரைப் பற்றிக் குறிப்பிடும் போது,

‘தமிழகத்தின் தலைநகரே! உன்னைக் காணும்பொழுது தமிழ்ப் புலவனாகிய என் உள்ளம் களிக்கின்றது. பழம் பெருமை வாய்ந்த தமிழகத்தின் தலைநகரம் நீயே என்று கருதும் பொழுது பெரியதோர் இன்பம் பிறக்கின்றது. கன்னித் தமிழ் - என்றும் உள தென் தமிழ் - தொன்று தொட்டு வழங்கும் திரு நகரம் நீயே என்று எண்ணும் பொழுது என்னையும் அறியாமல் கவிதை எழுகின்றது’

என்று கூறிவிட்டு சென்னை மாநகரை கருவில் இருந்து வளர்ந்து வந்த நிலையை மிக உயர்ந்த கற்பனையில் கூறியுள்ளார் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்.

‘அருமை திருநகரே! நீ கருவாய் இருந்தபோது திருவள்ளுவரின் அருளைப் பெற்றாய்! திருந்தி வருங்கால் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றாய்! பெருகி வளர்ந்த பின் தருமம் மிகு சென்னை என்று வடலூர் அடிகளால் வாழ்த்தப் பெற்றாய்’ என்று கூறுகிறார். மாநகரை குழந்தையாகக் கற்பனை செய்து பார்ப்பது புதுமையான கற்பனையாக அமைகின்றது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இதுபோன்று தலைவர்களை பல்வேறு கோணங்களில் கற்பனையாகப் பேச வைத்துள்ளார் அறிஞர் ரா.பி.செதுப்பிள்ளை. இது அவரின் அறிவு விலாசத்தைக் காட்டுகிறது.

**கற்பனைச் சின்னம்**

கற்பனை என்பது ஒவ்வொருவரின் மனநிலையைப் பொருத்து அமைவது. ஒரு பொருளைப் பலரும் அவரவருக்கேற்றாற் போல பார்த்து அதனைப் படைப்பாக வெளிப்படுத்துவர். ஆந்த வகையில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரமான நூல் தமிழின்பம். அது தமிழ்மனம் வீச வீச கற்பனையையும் பல இலக்கிய எடுத்துக்காட்டுகளையும் படைத்துள்ளார். 'அந்தி மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையிலமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளித்து மலர்ந்தது. மலையத் தெழுந்த இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த அந்திய பொழுதில், தென்மலைச் சாரலில் மகிழ்ந்து விளையாடிய முருகனென்னும், குமரன், விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக் கண்டு குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, முகம் மலர்ந்து அளவிலா இன்பமுற்றான். குறுநடை பயிலும் முருகனைக் கூர்ந்து நோக்கி, வெண்ணிலாவும் நகைமுகம் காட்டுவதாயிற்று, தன்னை நோக்கி முகம் மலர்ந்த தண்மதியை, அருகே போந்து விளையாட அழைத்தான் முருகன். முழலை மொழிகளால் நெடும்பொழுது வருந்தி யழைத்தும் வான்மதி வாராதிருக்கக் கண்டு முருகன் கண் பிசைந்து அழுது கரைந்தான்[2]

இவ்வாறாக முருகனை நிலலோடு விளையாடினான் என்று கற்பனையை மிகவும் நேர்த்தியாக ரா.பி. அமைத்துள்ளார். கற்பனையில் கடவுளையும் சிறுபிள்ளையாக, தற்பொழுது உயிரோடு இருக்கும் தன்மையில் கருத்தைக் கதைபோல அமைத்துள்ளார் ரா.பி.சேதுபிள்ளை அவர்கள்.

**நிலாவினை கற்பனையில் வர்ணித்தல்**

தமிழ்ப் படைப்பாளர்களில் பலரும் நிலாவினைக் கற்பனை செய்து படைத்துள்ளனர். அந்த வகையில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் நிலவினை தம் கற்பனைத் திறத்தால் மிக அழகாக வர்ணித்துள்ளார்.

“மாலை மதியே! சில கூறுகளில் நீ முருகனை ஒப்பாயாயினும் பல கூறுகளில் அவனுக்கு நீ நிகராகாய்; முக்கட் பெருமானாகிய முதல்வனுக்கு நீ ஒரு கண்ணாய் அமைந்தாய். முருகனோ கண்மணியாயமைந்தான்; கலைகள் குறைந்தும் நிறைந்தும், நீ வேறுபடுகின்றாய். முருகனோ எஞ்ஞான்றும் கலை நிறைந்த இன்னொளியாய் இலங்குகின்றான். நீ புற இருளையே போக்க வல்லாய்; முருகன் அக விருளையும் அகற்றவல்லான், உலகில் நீ ஒருபால் ஒளிருங்கால் மற்றொருபால் ஒழிகின்றாய்; முருகனோ அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து விளங்குகின்றான். நீரிற் பூக்கும் குமுத மலர்களை நீ மலர்விக்கின்றாய்; முருகனோ அன்பருடைய மன மலர்களைத் திறக்கின்றான். எனவே உன்னிடம் அவன் உயர்ந்தவனல்லனோ! அன்னான் வருக என்றழைத்தால் நீ வாராதிருக்க வழக்குண்டோ? [3.] என்று கற்பனையை ரா.பி. கூறுகிறார்.

பொதுவாக கற்பனை என்பது 'மனோராஜ்யம் என்று சராசரி மனிதன் கூறுவது தான் கற்பனை. மனத்தால் மட்டுமே படைத்து உருவாக்கப்படுவதுதான் கற்பனை. அவ்வாறு படைப்பதற்கு எந்த விதமான உரையறையோ கட்டுப்பாடோ கிடையாது' ஆற்றலுக்குத் தகுந்தாற்போலப் படைக்கப்படும். புறக் கண்களால் காணமுடியாததை 'அகக்கண்களால் கண்டு உணர்வது தான். மகிழ்வது தான் கற்பனை' என்பர் அறிஞர்கள்.

இந்த வரையறை ரா.பி.யின் கற்பனையில் பொருந்தி வந்துள்ளது. தமது நூல்களில் பல இடங்களில் கற்பனையைப் புனைந்துள்ளார்.

முருகனையும் அவரது பெற்றோர்களையும் கொண்டு கற்பனையில் பலரும் பல கதைகளைக் கூறியுள்ளனர். அந்த வகையில் ‘முருகனை வீட்டிற் காணாத அவன் தந்தை; முரகா, முருகா என அழைத்துக் குன்றின் சாரலை வந்தடைந்தார்; ஆங்குக் கரும் பாறையின் மீது முனி வரும் குமருனும் அமர்ந்திருக்கக் கண்டார். அருமந்த முருகனை விரைந்தெடுத்து ஆர்வமுற அணைத்துக் கண்ணீர் துடைத்து அழகொழுகும் அவன் திருமுகத்தை அமர்ந்து நோக்கி ‘என் கண்ணே! கண்மணியே! நீ ஏன் அழுதாய் தேனும் திணையும் வேண்டுமா? பாலும் பழமும் வேண்டுமா? என்று வியப்புடன் வினவி முத்தமிட்டார். முத்திட்டு நிமிர்ந்த அத்தனது சடையிலமைந்த பிறை மதியை முருகன் கண்டு கொண்டான்;’’[4] என்று அகக் கண்ணால் கண்ட காட்சியைக் கற்பனையாக்கியுள்ளார் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்.

‘கற்பனை என்பது புலன்கள் நேரடியாக ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவுக்குக் கொண்டுவரும் ஒரு வகைச் சக்தி தான் கற்பனை என்பர் தமிழறிஞர்.

**முடிவுரை**

பொதுவாக ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் தமது படைப்புக்களில் அதிகமான அளவில் கற்பனையைப் படைத்துள்ளார். ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்ச்சியை கவிஞனால் புனைந்துரைக்கப்படும் போது, கற்போர் உள்ளத்தில் வியப்புச் சுவை தோன்றக் கூடியவாறு இயற்கை நியதியைக் கடந்து மிகைப்படுத்திக் கூறப்படுவதுண்டு அதுதான் கற்பனை. ஆசிரியரின் கற்பனையும் உயர்வால் அமைந்தது தான்.

**அடிக்குறிப்பு**

[1] ரா.பி.சேதுப்பிள்ளை ,கடற்கரையினிலே, 16.

[2] ரா.பி.சேதுப்பிள்ளை ,தமிழின்பம், 106

[3] ரா.பி.சேதுப்பிள்ளை ,தமிழின்பம் - 106

[4] ரா.பி.சேதுப்பிள்ளை ,தமிழின்பம் ப.108



© 2022, IRJTSR 